சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.

ந.க.எண்.6860/அ2/2022 நாள்.30.09.2022.

பொருள்: பள்ளிக்கல்வித் துறை - பள்ளிகளை திறம்பட கண்காணிப்பதை உறுதி செய்வதற்காக கள அளவில் நிருவாகத்தை மறு சீரமைத்தல் மற்றும் சில பணியிடங்களை ஒப்படைப்பதற்கு பதிலாக சில பதவிகளை உருவாக்கி மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குதல் - பள்ளிக் கல்வியில் நிருவாக அதிகாரிகளுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புகளின் திருத்தப்பட்ட பிரதிநிதித்துவம் துறை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது - மாவட்டக்கல்வி அலுவலகங்கள் மாற்றியமைக்கப்பட்டது - கோப்புகளை சார்ந்த அலுவலகங்களுக்கு ஒப்படைத்தல் - தொடர்பாக.

பார்வை:

1. G.O.(Ms) No.151, பள்ளிக்கல்வி (SE1(1)) துறை. நாள்.09.09.2022.
2. சென்னை-08, சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.6860/அ2/2022 நாள்.26.09.2022.
3. பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.049138/அ3 பிரிவு/இ1/2022 நாள்.24.09.2022.
4. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.000813/அ2 பிரிவு/இ3/2022 நாள்.29.09.2022.

பார்வை (1) இல் காண் அரசாணையின்படி, சென்னை முதன்மைக்கல்வி அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வந்த மாவட்டக்கல்வி அலுவலகங்கள் முறையே கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | மாவட்டக்கல்வி அலுவலகம் | தற்போது மாற்றப்பட்ட அலுவலகம் | புதிய அலுவலகத்தில் இணையும் வட்டாரப் பகுதிகள் |
|---|---|---|---|
| 1 | மாவட்டக்கல்வி அலுவலகம்,<br>சென்னை கிழக்கு,<br>சென்னை மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலகம்,<br>(தொடக்கப் பள்ளிகள்),<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை மாவட்டம். | 1. ஜார்ஜ் டவுன்<br>2. இராயபுரம்<br>3. பெரியமேடு<br>4. பெரம்பூர்<br>5. புரசைவாக்கம்<br>6. திருவல்லிக்கேணி<br>7. எழும்பூர்<br>8. தி.நகர்<br>9. அடையாறு<br>10. மயிலாப்பூர்.<br>(ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் உட்பட) |

| வ.எண். | மாவட்டக்கல்வி அலுவலகம் | தற்போது மாற்றப்பட்ட அலுவலகம் | புதிய அலுவலகத்தில் இணையும் வட்டாரப் பகுதிகள் |
|---|---|---|---|
| 2 | மாவட்டக்கல்வி அலுவலகம், சென்னை தெற்கு, சென்னை மாவட்டம் | மாவட்டக்கல்வி அலுவலகம், (தனியார் பள்ளிகள்), எழும்பூர், சென்னை மாவட்டம். | 1. ஜார்ஜ் டவுன்<br>2. இராயபுரம்<br>3. பெரியமேடு<br>4. பெரம்பூர்<br>5. புரசைவாக்கம் |
| 3 | மாவட்டக்கல்வி அலுவலகம், சென்னை மேற்கு, சென்னை மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலகம், (தனியார் பள்ளிகள்), சைதாப்பேட்டை, சென்னை மாவட்டம். | 1. திருவல்லிக்கேணி<br>2. எழும்பூர்<br>3. தி.நகர்<br>4. அடையாறு<br>5. மயிலாப்பூர் |
| 4 | மாவட்டக்கல்வி அலுவலகம், சென்னை வடக்கு, சென்னை மாவட்டம் | மாவட்டக்கல்வி அலுவலகம், சென்னை வடக்கு, (இருப்பு) வில்லிவாக்கம், சென்னை மாவட்டம். | 1. ஜார்ஜ் டவுன்<br>2. இராயபுரம்<br>3. பெரியமேடு<br>4. பெரம்பூர்<br>5. புரசைவாக்கம் |
| 5 | மாவட்டக்கல்வி அலுவலகம், மத்திய சென்னை, சென்னை மாவட்டம். | மாவட்டக்கல்வி அலுவலகம், சென்னை தெற்கு, (இருப்பு) சைதாப்பேட்டை, சென்னை மாவட்டம். | 1. திருவல்லிக்கேணி<br>2. எழும்பூர்<br>3. தி.நகர்<br>4. அடையாறு<br>5. மயிலாப்பூர் |

பார்வை (2) இல் காண் இவ்வலுவலக செயல்முறைகளின்படி கோப்புகளை ஒப்படைக்க தயார் நிலையில் இருக்கும் வகையில் தெரிவிக்கப்பட்டது.

பார்வை (3) இல் காண் பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின்படி சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாறுதல் மற்றும் 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் / பணியிடத்தில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல், விருப்ப மாறுதல், பதவி உயர்வு மாறுதல் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கலந்தாய்வு 27.09.2022 முதல் 30.09.2022 முடிய நடைபெற்று வருகிறது.

பார்வை (4) இல் காண் தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி, மாறுதல் பெற்ற பணியாளர்கள் தங்களது இருக்கை பொறுப்புகளை பட்டியலிட்டு, மாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய மாவட்டக்கல்வி அலுவலகத்திற்கு உரிய (**தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் நடப்பில் உள்ள மற்றும் முடிவுற்றக் கோப்புகள் அனைத்தையும்**) கோப்புகளை சார்ந்த அலுவலகங்களுக்கு ஒப்படைக்குமாறும் மற்றும் 01.10.2022 அன்று மாறுதல் செய்யப்பட்ட புதிய அலுவலகங்களில் பணியில் சேரும் வகையில் இன்று (30.09.2022) பிற்பகல் பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர், அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், அனைத்து

வட்டாரக்கல்வி அலுவலர்கள், மற்றும் அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : பார்வையில் காண் செயல்முறைகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை.

பெறுநர்

1. முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், சென்னை-05.
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
4. உதவித்திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை-08.
5. அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்.
6. உடற்கல்வி ஆய்வாளர் (பொ), மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகம், சென்னை-06.

நகல்

1. ஆணையர், பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம் , சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. இயக்குநர், மெட்ரிக்பள்ளி இயக்ககம் , சென்னை-06 தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.